DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.120/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of December 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 7** | கிராமம் | : | திருமங்களம் |
| பெயர் | : | தாமரைக்கண்ணன் | தாலுகா | : | மதுரை |
| த/ பெ. | : | ரத்தினவேல் | சமயம் | : | |
| வயது | : | 37 | ஜாதி | : | |
| தொழில் | : | சார்பு ஆய்வாளர் | | | |

நாள்: 07.12.2023
நேரம்: 11.25 மு.ப

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை மாவட்டம் Q பிரிவு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.04.2021 ம் தேதி தேவிப்பட்டிணத்தில் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 பாலமுரளி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று காவல்நிலைய குற்ற எண். 152/2021 U/s. 294(b), 323, 427, IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.** பின்பு வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஹரிச்நாத், அருண் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்**

**அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகும்.** அன்றைய தினமே சாட்சிகள் பாலமுருகன், மணிமேகலை, மோனிசா, காளிஸ்வரி, பால்சாமி, மாதவகுமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு **1 முதல் 2** எதிரிகளை 09.05.2021ல் 11.30 மணியளவில் சித்தார் கோட்டை பஸ் ஸ்டாப் அருகே வைத்து கைது செய்து காவல்நிலைய பிணையில் விடுவித்தேன். பின்பு நான் பணி மாறுதல் ஆகிவிட்டதால் வழக்கு கோப்புகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>

சம்பவம் குறித்து காலதாமமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் 1ம் எதிரியின் மகளை காதலித்து கடத்தி சென்று திருமணம் செய்ததால் அவர்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது என்றால் கடத்தி செல்லவில்லை காதல் திருமணம் செய்து கொண்டது தெரியும். காதல் திருமணம் செய்து கொண்டதால் 1ம் எதிரி தனக்கும் தனது மகளுக்கும் இடையே எந்த சம்மந்தமும் இல்லை என்று காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்துவிட்டு சென்றால் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி அவ்வாறு எழுதிக்கொடுத்துவிட்டு சென்றார் என்றாலும் அதனால் 1ம் எதிரிக்கும் அவரது மகள் மற்றும் அ.சா.1க்கு இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். சம்பவம் குறித்து புகார்தாரர் எழுத்து மூலமான புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக நான் கள விசாரணை மேற்கொண்டேனா என்றால் செய்தேன். சம்பவத்தின் போது ஆட்டோ சேதம் அடைந்ததாக சொல்லப்படும் நிலையில் ஆட்டோவின் எந்த பகுதி சேதம் அடைந்தது என்று அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேதம் அடைந்ததாக சொல்லப்படும் ஆட்டோவின் உரிமையாளர் யார் என்ற விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சேதம் அடைந்ததாக சொல்லப்படும் ஆட்டோவின் புகைப்படம் மற்றும் ஆர்.சி.புத்தகத்தை நான் இவ்வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் அவரை அசிங்கமாக பேசி அடித்து அவரது ஆட்டோவை சேதப்படுத்தவில்லை என்றாலும் அ.சா.1 ன் அம்மாவை அசிங்கமாக பேசி காயப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**ம.வி – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.12.07 21:19:35 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.120/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of December 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 6** | கிராமம் | : | தேவிப்பட்டிணம் |
| பெயர் | : | விஜய் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | சாத்தையன் | சமயம் | : | இந்து |
| வயது | : | 30 | ஜாதி | : | நாடார் |
| தொழில் | : | மெக்கானிக் | | | |

<u>நாள்: 07.12.2023</u>
<u>நேரம்: 11.25 மு.ப</u>

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து தேவிப்பட்டிணத்தில் இமேஜ் என்ற பெயரில் மெக்கானிக் ஓர்க் ஷாப் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 பாலமுருகன் என்பவரை நான் பார்த்துள்ளேன். 7 வருடங்களுக்கு முன்பு அவரது ஆட்டோ சேதம் ஏற்படுத்தியது சம்மந்தமாக ஆட்டோ பொருட்கள் வாங்குவதற்கு வந்தார். அவருக்கு நான் பொருட்கள் வழங்கி அதற்கு நான் ரசீது வழங்கினேன். எனக்கு தனியாக எங்கள் கடைக்கு ரசீது புத்தகம் கிடையாது. அதனால் ராஜாராம் ஆட்டோ மொபைல்ஸ் என்ற பெயரில் நான் ரசீது வழங்கினேன். நான் வழங்கிய ரசீது அ.சா.ஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பு கு.வி**

என்னுடைய ஓர்க் ஷாப்பில் தினசரி நிறைய வாகனங்கள் பழுதி பார்க்க வரும் என்றால் சரிதான். யார் யார் வாகனம் எந்தேந்த தேதியில் பழுது

பார்ப்பதற்காக வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வழங்கியதாக சொல்லபபடும் ரசீதை நான் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது ஓர்க் ஷாப் முறையாக பதிவு செய்யப்படாத ஓர்க் ஷாப் என்றால் சரிதான். நான் வழங்கிய ரசீதுகள் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ரீசிதில் என்னுடைய ஓர்க் ஷாப்பின் பெயர் இடபெறவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் அன்றைய தேதியில் ஆட்டோ எதுவும் பழுது பார்ப்பதற்காக வரவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக அ.சா.1 கேட்குக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக ரசீது வழங்கி அதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி – இல்லை**

E VIRGIN
VESTA

Digitally signed by
E VIRGIN VESTA
Date: 2023.12.07
21:19:51 +0530